Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 278

புதன்கிழமை
31 ஓகஸ்ட் 2022

ஆவணி 15 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50

## கோதுமைக்கு கடும் கிராக்கி

யாழ். நகரப்பகுதிகளில் விநியோகம் மட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஓக. 31
கோதுமை மாவின் விலையேற்றத்தை அடுத்து, நாட்டின் பல பகுதிகளில் கோதுமைக் 11

# நாணய நிதியத்துக்கு 'வாலாட்டிய' பட்ஜெட்!

- அரச அலுவலர்களுக்கு கட்டாய ஓய்வு
- வற் வரி 15 வீதமாக உயர்கின்றது
- நலிந்தவர்களுக்கு நிவாரணத் தொகை
- 5 வீத பொருளாதார வளர்ச்சி இலக்கு
- விவசாயக் கடன்கள் தள்ளுபடி

**கொழும்பு, ஓகஸ்ட் 31**
**2022ஆம் ஆண்டின் இடைக்கால பட்ஜெட், பல்வேறுபட்ட துறைசார் முன்மொழிவுகளுடனும், நாணய நிதியத்தின் உதவிகளை இலக்காகக் கொண்டும் நாடாளுமன்றத்தில் நேற்று நிதியமைச்சரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரம சிங்கவால் முன்வைக்கப்பட்டுள்ளது.** 11

## அரச அலுவலர்களுக்கு 60 வயதோடு ஓய்வு!

60 வயதுக்கு மேற்பட்டவர்கள் டிசெம்பருடன் கட்டாய ஓய்வு

கொழும்பு, ஓக. 31
60 வயதைத் தாண்டிய நிலையில், அரச சேவையில் பணியாற்றிக் கொண்டிருக்கும் அரச அலுவலர்கள், 11

## ரூ.350 மில்லியன் பெறுமதியான விவசாயக் கடன்கள் தள்ளுபடி!

கொழும்பு, ஓக. 31
விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ரணில் அரசாங்கம் 11

## இடைக்கால பட்ஜெட்டில் 50 நிறுவனங்கள் மறுகட்டமைப்பு!

கொழும்பு, ஓக. 31
50 அரச நிறுவனங்களை வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் மறுகட்டமைப்புச் செய்யத் தீர்மானிக்கப்பட் 11

## நலிந்தோருக்காக மாதம் ரூபா 10,000

'பட்ஜெட்'டில் பரிந்துரைப்பு

கொழும்பு, ஓக. 31
பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதிர்வரும் 4 மாதங்களுக்கு மாதாந்தம் 10 ஆயி 11

## இலங்கையிலும் இனி கல்வி தனியார் மயம்?

வெளிநாட்டுப் பல்கலைகளை ஊக்குவிக்கவும் நடவடிக்கை

விரிவு - பக். 12

இனப்படுகொலையாளிகளை ஆதரிக்கும்

## சீனத்தூதுவரின் கருத்தால் தமிழ் மக்கள் வேதனை!

யாழ். பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியம் கண்டனம்

யாழ்ப்பாணம், ஓக. 31
ஈழத் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலையை தீவிரமாக முன்னெடுத்த இலங்கை அரசுக்கு ஆதரவு தெரிவித்து, சீனத் 11

## சீனாவின் உதவிப் பணம் யாழ். பல்கலை மாணவருக்கு

பட்டியல் இன்று அனுப்பப்படும்

யாழ்ப்பாணம், ஓக. 31
சீனத் தூதரகத்தால் 42 மில்லியன் ரூபா பெறுமதியான உதவிப் பணம் யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது. இதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவர்களின் 11

## கிளிநொச்சியில் காலூன்ற சீனா கடும் பிரயத்தனம்?

பல்கலை மாணவர்களின் ஊடகச் சந்திப்பால் ஒப்பந்தம் கைச்சாத்திடல் திடீரென ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 31
யாழ். பல்கலைக்கழகத்துக்கும், சீன விவசாயப் பல்கலைக்கழகத்துக்குமிடையில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவிருந்த ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு மறுதிகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப் 11

## உறவுகளைத்தேடி நேற்றும் போர்



யாழ்ப்பாணம், ஓக. 31
சர்வதேச காணாமலாக்கப்பட்டவர்களின் தினமான நேற்று, காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு நீதிகோரி, தமிழர் தாயகத்தில் நேற்றுப் பரவலாகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

**புதுக்குடியிருப்பு**
புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற 04

MOBILE
414 ரூபா இற்கு #170# அழைத்து அல்லது
SELFCARE APP ஊடாக இப்போதே அக்டிவ் செய்யுங்கள்.
நீங்கள் விரும்பும் 9 App இற்கும் வேண்டியளவு
data மற்றும் மேலதிகமாக 2GB.
SLT-Mobitel Mobile Non-stop லொக்கா
TRC/M/PRO/20/07
www.sltmobitel.lk
SLTMOBITEL
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்துக் கட்சி அரசுக்கு மீண்டும் ரணில் அழைப்பு!

**கொழும்பு, ஓக.31**
**அனைத்துக் கட்சி அரசாங்கத்தில் இணைந்து கொள்ளவேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்துக் கட்சிகளுக்கும் மீண்டும் அழைப்பு விடுத்துள்ளார்.**

அனைத்துக் கட்சி அரசாங்கம் அமைக்கும் முயற்சிகள் இழுபறியில் உள்ள நிலையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில் நிதியமைச்சர் என்ற ரீதியில் இடைக்கால வரவு - செலவுத் திட்ட உரையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

அனைத்துக் கட்சி அரசாங்கம் அமைக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றவுடன் அறிவித்திருந்தபோதும் இதுவரை அது கைகூடவில்லை.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி ஆகியன அனைத்துக் கட்சி அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என்று அறிவித்துள்ளன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்சக்களின் நெறிப்படுத்தலிலேயே இயங்குகின்றார் என்று அவை குற்றஞ்சாட்டுகின்றன.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளைப் பெறுவதற்கு நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை அவசியம் என்பதால், அனைத்துக் கட்சி அரசாங்கத்தை அமைக்கவேண்டிய அவசியம் அரசாங்கத்துக்குக் காணப்படுகின்றது. இந்தநிலையிலேயே ரணில் விக்கிரமசிங்க அனைத்துக் கட்சிகளுக்கும் மீண்டும் அழைப்பு விடுத்துள்ளார். (எ-இ)



# ஐ.எம்.எப். குழுவினருடன் சஜித் குழுவினர் சந்திப்பு

கொழும்பு, ஓக.31
சர்வதேச நாணய நிதியத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவினருடனான சந்திப்பொன்று நேற்றுக் கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இலங்கை எதிர்நோக்கும் நிதி நெருக்கடிக்கு தீர்வுகளை வழங்குவது தொடர்பான கலந்துரையாடலாக இது இடம்பெற்றுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கலந்துரையாடல் சபையின் தலைவர், பிரதித் தலைவர் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான நிரந்தரப் பிரதிநிதி ஆகியோருடன் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கலாநிதி ஹர்ஷ டி சில்வா, ரவூப் ஹகீம், எரான் விக்ரமரத்ன, கபீர் காஸிம் மற்றும் நிரோஷன் பெரேரா உட்பட பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர். (எ-இ)

# அமைச்சுப் பதவி ஆசையை ரணிலுக்கு கூறிய தம்மிக்க!

கொழும்பு, ஓக.31
பொருளாதார அபிவிருத்தி தொடர்பான அமைச்சுப் பதவியை ஏற்கத் தயார் என வர்த்தகர் தம்மிக்க பெரேரா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தனியார் உள்ளூர் ஊடகம் ஒன்றுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒன்றிலேயே தம்மிக்க பெரேரா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரதமராக இருக்கும்போது ரணில் விக்கிரமசிங்கவை நிதியமைச்சர் பதவியில் இருந்து விலக வேண்டும் என்று அவர் முன்னர் கூறியிருந் தமை தொடர்பில் வினவியபோது, தாம் தொழில்நுட்ப அறிக்கையை மாத்திரமே வெளியிட்டேன் என்று பதிலளித்துள்ளார்.

ஒரு விடயம் தொடர்பிலான அறிக்கையையே வெளியிட்டேன் என்றும், ஜனாதிபதியுடன் தமக்கு தனிப்பட்ட பிரச்சினைகள் எதுவும் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)



# குறைந்தளவு பவுஸர்களே விநியோகத்தில்

கொழும்பு, ஓக.31
எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் விநியோகத்துக்காக பயன்படுத்தப்படும் பவுஸர்களின் எண்ணிக்கை 100 ஆகக் குறைந்துள்ளது என்று இலங்கை பெற்றோலிய தனியார் தாங்கி உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

முன்னர் எரிபொருள் விநியோகத்துக்காகச் சுமார் 350 முதல் 400 பவுஸர்கள் பயன்படுத்தப்பட்டன என்றும், தற்போது அவை 100 ஆகக் குறைந்துள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, எரிபொருள் விநியோகம் சீராக நடைபெறாததால் நாட்டின் பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் நிரப்புவதற்காக மீண்டும் நீண்ட வரிசைகள் தோன்ற ஆரம்பித்துள்ளன. (எ-இ)

# சனத் நிஷாந்தவுக்கு எதிராக மனு தாக்கல்

கொழும்பு, ஓக. 31
நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்தவுக்குத் தண்டனை வழங்கக் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சட்டத்தரணி விஜித் குமாரவால் மற்றுமொரு மனு நேற்று தாக்கல் செய்யப்பட்டது.

அதேவேளை, சட்டத்தரணி பிரியலால் சிறிசேனவால் சனத் நிஷாந்தவுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்றுமுன்தினமும் மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டது. (எ-14.இ)

# உதிரிப்பாகங்கள் தட்டுப்பாடு பல ரயில் சேவைகள் இரத்து!

கொழும்பு, ஓக.31
ரயில் உதிரிப் பாகங்களின் தட்டுப்பாடு காரணமாக நேற்றுமுன்தினம் முதல் மறுஅறிவித்தல் வரை பல ரயில்களின் சேவைகளை ரயில்வே திணைக்களம் இரத்து செய்துள்ளது.

மலையக ரயில், களனி பள்ளத்தாக்கு ரயில் மற்றும் கரையோர ரயில் உள்ளிட்ட பல ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன என்று ரயில்வே அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இரத்துச் செய்யப்பட்ட ரயில்களில் அளுத்கம, அம்பேபுஸ்ஸ, கொழும்பு கோட்டை மற்றும் ஹோமாகம ரயில் நிலையங்களுக்கு இடையில் இயங்கும் தலா இரண்டு ரயில் சேவைகளும் உள்ளடங்குகின்றன என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-14.இ)

# டெங்குத் தொற்று தொடர்பில் அவதானமாகச் செயற்படுக

## சாவ. சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கை

சாவகச்சேரி, ஓக. 31
தற்போது மழை பெய்து வருவதால் தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்குத் தொற்றின் தாக்கம் அதிகரித்து வருகின்றது. இதனால் பிரதேசத்தில் இருப்பவர்கள் தத்தமது குடியிருப்புகள் மற்றும் சுற்றாடலைத் துப்புரவாக வைத்திருக்கவேண்டும் என்றும், டெங்குக் குடம்பிகள் உருவாகக்கூடிய நீரேந்து பொருள்களை அப்புறப்படுத்த வேண்டும் என்றும் சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

கடந்த வருடம் பெய்த கடும் மழை மற்றும் டெங்குப் பிரதேசம் என அறிவிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்றவர்களால் டெங்குத் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது. கடந்த 8 மாதத்தில் மட்டும் தென்மராட்சியைச் சேர்ந்த 122 பேர் டெங்குத் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்றுள்ளனர்.

இந்தநிலையில் தற்போது பரவலாக மழை பெய்து வருவதால் டெங்கு நுளம்பு அதிகரித்து பலர் பாதிக்கப்படும் அபாய நிலை காணப்படுகிறது. இதனால் அனைத்துப் பொதுமக்களும் தமது குடியிருப்புகள் மற்றும் அயலில் உள்ள காணிகளைத் துப்பரவு செய்து டெங்கு நுளம்பு உருவாகக்கூடிய நீரேந்து பொருள்கள் காணப்படின் அவற்றை அப்புறப்படுத்த உள்ளூராட்சிசபைகளின் வாகனங்கள் வரும் வேளையில் ஒப்படைக்க வேண்டும்.

இதேவேளை டெங்குத் தடுப்பு அலகினர், திடீர்ப் பரிசோதனைகளை மேற்கொள்ளும்போது மேற்கூறப்பட்டவற்றை ஒழுங்குமுறையில் செய்யாவிடின் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-14.9)

# எரிபொருள் கொள்வனவுக்கு குழு நியமிக்கக் கோரிக்கை

கொழும்பு, ஓக. 31
எரிபொருள் மற்றும் நிலக்கரிக் கொள்வனவு தொடர்பில் நாடாளுமன்ற குழுவொன்றை நியமிக்க வேண்டும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நிலக்கரி மற்றும் எரிபொருளைக் குறைந்த விலையில் கொள்வனவு செய்ய முடியும் என்று நாடாளுமன்ற உறுப்பினர்களான சம்பிக்க ரணவக்க உள்ளிட்டோர் தொடர்ச்சியாகக் குறிப்பிட்டு வருகின்றனர்.

அத்தகைய சாத்தியக்கூறுகளை ஆராய குழுவொன்று [illegible] வின் தலை[illegible] வேண்டும்- என்றார். (எ-14.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## முதலில் வீட்டுக்குப்போகவேண்டியது யார்?

நிதி அமைச்சரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவால் நாடாளுமன்றத்தில் நேற்று முன்வைக்கப்பட்ட 2022ஆம் ஆண்டுக்கான இடைக்கால பட்ஜெட், முற்றுமுழுவதுமாக அரச அலுவலர்களையே இலக்குவைத்திருக்கின்றது.

அரச அலுவலர்கள் ஓய்வுபெறும் வயதெல்லையை 60 என்றவாறாக மட்டுப்படுத்தியுள்ள ரணில், 60 வயதைத் தாண்டிய நிலையில் தற்போது பணியாற்றிக் கொண்டிருக்கும் அரச அலுவலர்கள் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் கட்டாய ஓய்வு பெறவேண்டும் என்றும் கால அவகாசத்தை வழங்கியுள்ளார்.

இதில் வேடிக்கை என்னவென்றால், அறுபது வயதில் அரச அலுவலர்களின் பணித்திறன், வினைத்திறன் என்பன மங்கிப்போய்விடும் என்பதால், அவர்களை ஓய்வு பெறச்சொல்லி வரவு – செலவுத்திட்டத்தில் முன்மொழிந்த ஜனாதிபதிக்கு வயது 73. இந்த முன்மொழிவை நெறிப்படுத்திய சபாநாயகரின் வயதோ 77. பிரதமரும் 73 வயதானவர்தான். அப்படியானால், அரச அலுவலர்களுக்கு மட்டும்தான் வினைத்திறனும் பணித்திறனும் குன்றுமா? அரசியல்வாதிகளுக்கு இந்த வயதெல்லை பொருந்தாதுபோலும்.

இதுவரை காலமும் 60 வயதாக இருந்த ஓய்வுபெறும் வயதெல்லையை ராஜபக்ச அரசாங்கமே திடீரென 65 வயதாக உயர்த்தியிருந்தது. பொருளாதார நெருக்கடியைத்தீர்ப்பதற்கான ஒரு தந்திரோபாயமாகவும் இந்த வயதெல்லை உயர்வை ராஜபக்ச அரசாங்கம் பீற்றிக்கொண்டது. ஆனால், 'பருத்தி மூடைகள் குடோனிலேயே இருக்கட்டும்' என்ற கதையாக மீண்டும் ஓய்வு வயதெல்லையை 60ஆக ரணில் அரசாங்கம் குறைத்திருக்கின்றது. அதற்கும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு என்றே காரணம் வேறு சொல்லப்படுகின்றது. 'அப்படியானால், எந்த அரசாங்கம் உண்மை சொல்கின்றது?' என்று கண்டுபிடிக்க முடியாமல் மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

அரச அலுவலர்களுக்கு எதிரான கருத்துக்களை ரணிலின் அமைச்சரவை அண்மைக்காலமாகக் கொண்டிருந்தமை வெளிப்படையானதே. அரசஅலுவலர்களால்வினைத்திறனான பணியை வழங்க முடியாவிட்டால் அவர்கள் தாராளமாக வீடு செல்லலாம். அவர்களுக்குத் தொடர்ந்து உணவூட்டத் தம்மால் முடியாது என்று ஜனாதிபதியும், பெற்றோலியத் துறையில் பணியாற்றும் அரைவாசிக்கும் மேற்பட்ட ஊழியர்கள் வினைத்திறன் அற்றவர்கள் என்று துறைசார் அமைச்சர் காஞ்சனவும், பத்து லட்சம் அரச அலுவலர்கள் வினைத்திறன் அற்றவர்கள் என்று அமைச்சர் ரொஷான் ரணசிங்கவும் கடந்த ஒரு வாரத்துக்குள்ளாக முன்வைத்த கருத்துக்கள் அரச அலுவலர்கள் மீது ரணில் அரசாங்கம் கொண்டிருந்த கடும் போக்கையே கட்டியம் செய்தன – செய்கின்றன.

நாணய நிதியத்தின் உதவி இலங்கைக்குக் கிடைக்க வேண்டுமாக இருந்தால், அரச அலுவலர்களின் ஆட்குறைப்பும் ஒரு நிபந்தனையாக வலியுறுத்தப்பட்டிருந்தது. அரச அலுவலர்கள் மீது ரணில் அரசாங்கத்துக்கு வந்த புகைச்சலுக்கு இதுவே முதன்மைக்காரணம். அரசாங்கத்தின் இந்த அறிவிக்கப்படாத கொள்கையால், அரச அலுவலர்களின்மேல் எந்நேரமும் பாயக்கூடிய கூரிய கத்தி ஊசலாடிக் கொண்டிருந்தமையை நன்றாகவே அவதானிக்க முடிந்தது. அதன் தொடர்ச்சிதான் ஓய்வு வயதெல்லை அறுபதோடு மட்டுப்படுத்தப்பட்ட விடயம். விரைவில் இதன் அடுத்தகட்டமாக அரச ஊழியர்களை ஆட்குறைப்புச் செய்யும் வேலையை வெவ்வேறு பெயர்களில் அரச இயந்திரம் நிறைவேற்றும் என்றும் எதிர்பார்க்கலாம்.

ஆனால், ராஜபக்சக்களின் ஆதரவுடன் ஆட்சிப்பீடம் ஏறியுள்ள ரணில் அரசாங்கத்திடம் சில கேள்விகளைக் கேட்க வேண்டிய தருணமும் இதுதான். இலங்கையின் சனத்தொகையுடன் ஒப்பிடுகையில் இந்த நாட்டில் உள்ள அரச அலுவலர்களின் எண்ணிக்கை மிதமிஞ்சியதுதான். இதை மறுத்துரைப்பதற்கில்லை. இவ்வாறாக திண்ணைக்கு மண்ணெடுக்கும் வகையிலானதாக அரச பணித்துறைகள் மாற்றப்படுவதற்கு யார் காரணம்? தேர்தல்களை இலக்குவைத்து வழங்கப்பட்ட வேலை வாய்ப்புக்களை வழங்கியவர்கள் யார்?

ரணிலினதும், ராஜபக்சக்களினதும் தேர்தல்களை இலக்குவைத்த அரசியல் நகர்வுகள்தான் இந்த அளவுகடந்த ஆளணிக் குவிப்புக்குக் காரணம் என்றால், அதை ரணிலாலோ அல்லது ராஜபக்சக்களாலோ மறுத்துரைக்க முடியுமா? குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகவும் கட்சிகளின் இலாபங்களுக்காகவும் நியமனங்களை வழங்கி அதன் மூலம் திறைசேரியை காலிசெய்துவிட்டு, இன்று அத்தனை குற்றங்களையும் தவறுகளையும் அரச அலுவலர்கள் மீது பொத்தம்பொதுவாக ஏற்றிவிடுவதையோ – அவர்களை நோக்கி விரல் நீட்டுவதையோ – பரிகசிப்பதையோ ஏற்கமுடியாது. அரச பணிகளில் அளவுகடந்த பணியாளர்கள் இருக்கின்றனர் என்றால் அதற்குக் காரணம் ரணிலும், ராஜபக்சக்களும்தான் – அவர்களின் அரசியல்தான். ஆகவே, அரச அலுவலர்களை வீட்டுக்குப் போகச் சொல்லும் ரணிலும் அவரைப் பின்னால் நின்று இயக்கும் ராஜபக்சக்களும்தான் முதலில் வீட்டுக்குப் போகவேண்டும்.

**நாளொரு நல்வார்த்தை**

"சாப்பிடுவதிலும், நடமாடுவதிலும், தூங்குவதிலும், விழித்திருப்பதிலும் அளவாக இருப்பவன் துன்பம் இல்லாமல் இருப்பான்"

- பகவத் கீதை




# சிறிலங்காவின் கடன் வழங்குநரை இணைக்கும் முயற்சியில் ஜப்பான்

**கொழும்பு, ஓக.31**



**இலங்கையின் கடன் விவகாரம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு சிறிலங்காவின் அனைத்து கடன் வழங்குநர் நாடுகளும் ஒன்றிணைவது அவசியமானது. இந்த விடயத்தில் சிறிலங்காவின் ஏனைய கடன் வழங்குநர் நாடுகளை ஒருங்கிணைக்கும் பணிகளை ஜப்பான் முன்னெடுக்கும்.**

இவ்வாறு ஜப்பானிய நிதி அமைச்சர் ஷுனிச்சி சுசுகி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

இருதரப்பு கடன் மறுசீரமைப்புப் பேச்சுவார்த்தைக்கு, தமது பெரிய கடன் வழங்குநர் நாடுகளை ஒன்றிணைக்க வேண்டும் என்று ஜப்பானை இலங்கை கோருகின்றது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் ரொய்ட்டர்ஸிடம் தெரிவித்திருந்தார்.

ஆயினும் முன்னர் கருத்துத் தெரிவித்திருந்த ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் யோஷிமாசா ஹயாஷி, அவ்வாறான ஒரு சந்திப்பை நடத்துவதற்கு தமது நாடு இலங்கையுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளவில்லை என்று கூறியிருந்தார்.

நாங்கள் இலங்கைத் தரப்புடன் பல்வேறு தொடர்புகளை மேற்கொண்டு வருகிறோம், ஆனால் அத்தகைய பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு எந்த ஏற்பாடும் நடக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்தநிலையில், தற்போது ஜப்பானிய நிதி அமைச்சர் ஷுனிச்சி சுசுகி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (எ-இ)

## முட்டை விற்பனை வீழ்ச்சி

கொழும்பு, ஓக. 31



நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் முட்டைகளைக் கொள்வனவு செய்ய முடியாதுள்ளது என்று நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் அதிகரித்த முட்டையின் விலையே இதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. நாட்டிலுள்ள பல வர்த்தக நிலையங்களில் முட்டை விற்பனை செய்யப்படுவதில்லை. இதனால் முட்டை விற்பனையில் மிகப்பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-14)

## தொடர் ஏற்றுமதியால் தேங்காய்க்கு தட்டுப்பாடு?

கொழும்பு, ஓக. 31

இரண்டு மாதங்களில் 2 மில்லியன் தேங்காய்களைப் பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்ததால் எதிர்காலத்தில் சந்தையில் தேங்காய் தட்டுப்பாடு ஏற்படும். இவ்வாறு அகில இலங்கை பாரம்பரிய தேங்காய் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் அழைப்பாளர் புத்திக டி சில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் காலப்பகுதி இலங்கையில் தேங்காய் உற்பத்தி குறைந்த காலப்பகுதியாக அமையும். இந்த நிலையில் நாட்டில் தேங்காய்க்கு தட்டுப்பாடு ஏற்பட்டால் அதற்கு தென்னை அபிவிருத்தி அதிகார சபையே பொறுப்பேற்கவேண்டும் என்றும் புத்திக டி சில்வா தெரிவித்துள்ளார். (எ-14,இ)

**நாளை**

01.09.2022
வியாழக்கிழமை
ஆவணி 16

சுபநேரம் : 07.35 - 09.05
ராகுகாலம்: 01.35 - 03.05

ஷஷ்டி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைத் தீர்வுடன் புதிய அரசமைப்புத் தேவை!

## வலியுறுத்துகின்றது எதிரணி



**கொழும்பு, ஓக.31**

**பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும். தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு அடங்கிய புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதில் எதிரணி உறுதியாக இருக்கின்றது.**

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்திக் கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் காலிமுகத்திடல் செயற்பாட்டாளர்கள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும்.

தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு அடங்கிய புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் உள்ளிட்ட விடயங்களில் எதி ரணியினராகிய நாம் உறுதியாக இருக்கின்றோம்.

இந்த விடயங்கள் நிறைவேற்றப் பட்டால் பொருளாதார நெருக்கடியும் நீங்கும்.

ஏனெனில் இந்த விடயங்களில் வெளிநாடுகளும் சர்வதேச அமைப்புகளும் உறுதியாக உள்ளன. அவை நிறைவேறியவுடன் சர்வதேச சமூகம் தாமாகவே முன்வந்து எமது நாட்டுக்கு உதவி வழங்கும். புலம்பெயர் தமிழ் மக்களும் எந்தவித அச்சமும் இன்றி நாட்டுக்கு வந்து முதலீடுகளை வழங்கி உதவி செய்வார்கள்.

ஆனால், இந்த விடயங்களை நிறைவேற்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நம்பகத்தன்மையுடன் செயற்படுவாரா என்பது கேள்விக்குறியே.

ராஜபக்சக்களின் 'மொட்டு'க் கட்சியினரின் செல்லப்பிள்ளையான ரணில் விக்கிரமசிங்க அவர்களின் சொற்படியே நடக்கின்றார். அதனால்தான் ஜனாதிபதியை நாம் எதிர்க்கின்றோம்- என்றார். (எ-22)

## ரயிலில் பயணித்தவர் தவறி விழுந்து காயம்

யாழ்ப்பாணம், ஓக. 31

காங்கேசன்துறையில் இருந்து முறிகண்டி நோக்கிச் சென்ற ரயிலில் பயணித்த நபரொருவர் அதிலிருந்து வீழ்ந்ததில் படுகாயமடைந்தார். ஆனையிறவுப் பகுதியில் நேற்று நண்பகல் இந்த விபத்துச் சம்பவித்துள்ளது.

யோகலிங்கம் கலைவாணன் (வயது-22) என்ற நபரே காயமடைந்தவர். அவர் முதலுதவிச் சிகிச்சைகளின் பின்னர் நோயாளர் காவுவண்டி மூலம் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ம-113)

## சுழிபுரம் மத்தியில் பணம், நகை திருட்டு

யாழ்ப்பாணம், ஓக. 31

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் மத்திய பகுதியில் வீடொன்றில் இருந்து 8 பவுண் நகையும் 15 ஆயிரம் ரூபா பணமும் திருடப்பட்டுள்ளது.

வீட்டின் உரிமையாளர் மருத்துவமனைக்குச் சென்றுவிட்டுத் திரும்பியபோது, வீட்டில் மறைத்துவைக்கப்பட்டிருந்த சாவியை எடுத்து வீட்டின் கதவு திறக்கப்பட்டு அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த 8 பவுண் நகையும் 15 ஆயிரம் ரூபா பணமும் திருடப்பட்டுள்ளது என்று வட்டுக்கோட்டைப் பொலிஸில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-125)

## வடமாகாணத்தில் மழை தொடரும்!

யாழ்ப்பாணம், ஓக. 31

வங்காள விரிகுடாவில் நிலைகொண்டுள்ள வளிமண்டல மேலடுக்கு சுழற்சியின் காரணமாக தற்போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கு அவ்வப்போது கிடைத்து வரும் மழை எதிர்வரும் 5ஆம் திகதிவரை தொடர்வதற்கு வாய்ப்புள்ளது என்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழக புவியியற்துறை மூத்த விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார்.

அத்துடன் இந்த வளிமண்டல சுழற்சி அடுத்த சில தினங்களில் வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளையும் உள்ளடக்கியே அரபிக்கடல் நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் அவ்வப்போது பரவலாக மிதமானது முதல் கனமானது வரை மழை நீடிக்க வாய்ப்புள்ளது - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## யாழ். பேருந்து நிலையம் மழையால் வெள்ளத்தில்



யாழ்ப்பாணம், ஓக. 31

திடீரென பெய்த மழை காரணமாக யாழ். பேருந்து நிலையம் நேற்று வெள்ளக்காடாகக் காட்சியளித்தது. இதனால், பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

கால்வாய்களுக்குள் பிளாஸ்டிக் பொருள்கள் மற்றும் குப்பைகள் தேங்கியிருந்த நிலையிலேயே; வெள்ளம் வழிந்தோட இடமின்றி பேருந்து நிலையத்தை வெள்ளம் சூழ்ந்தது. இதையடுத்து யாழ். மாநகர சபையினர் கனரக வாகனங்களின் உதவியுடன் வெள்ளத்தை வடிந்தோடச் செய்தனர்.

யாழ். மாநகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பல கால்வாய்கள் அண்மைக்காலத்தில் துப்பரவாக்கப் பட்டிருந்தன.

எனினும், பொதுமக்கள் பொறுப்பற்ற விதத்தில் பிளாஸ்டிக் பொருள்களை கால்வாய்களுக்குள் வீசிச் செல்வதால்தான் இவ்வாறு தொடர்ந்தும் வெள்ள நிலை ஏற்படுகின்றது என்று பலரும் விசனம் வெளியிட்டுள்ளனர். (ம-27-17)

## உறவுகளைத்தேடி....

ஆர்ப்பாட்டப் பேரணி, புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனை முன்பாக ஆரம்பமாகி புதுக்குடியிருப்புச் சந்தியில் நிறைவடைந்தது. இந்த ஆர்ப்பாட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, சிவப்பிரகாசம் சிவமோகன், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், காணாமற்போனோரைத் தேடிஅறியும் குழுவின் செயலாளர் சுந்தரம் மகேந்திரன், மின்சாரசபைத் தொழிற்சங்கத் தலைவர் பியந்த விக்கிரமசிங்க, நவசமசமாஜக்கட்சியின் அரசியல்குழு உறுப்பினர்கள், கரைதுறைப்பற்று பிரதேசசபைத் தவிசாளர் க.விஜிந்தன், பிரதேசசபை உறுப்பினர்கள் சமூகசெயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

**கிளிநொச்சி**

காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதிகோரிய போராட்டம் கிளிநொச்சியிலும் இடம்பெற்றது. கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் இடம்பெற்றது. போர்க் குற்றவாளிகளை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினார்கள்.

**யாழ்ப்பாணம்**

அதேபோல், யாழ்ப்பாணத்திலும் போராட்டங்கள் நேற்று இடம்பெற்றன. காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளாலும் தன்னார்வ அமைப்புகளாலும் யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்துக்கு முன்பாகவும், யாழ்ப்பாணத்தில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்துக்கு முன்பாகவும் இந்தப் போராட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஊடகப் பேச்சாளர் சட்டதரணி க.சுகாஸ், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் போராட்டத்தில் கலந்துகொண்டனர். (அ-ம-23-125-27-246)

A/L CHEMISTRY

- DAY CLASS - Paper Class With Revision
- 2023 - d-BLOCK
- 2024 - Chemical Calculation

Mr.S.SURESHKUMAR B.Sc (Hons), PGDE

(யாழ்/தேசிய பாடசாலை ஆசிரியர்)

- Brown Rd Jaffna
- Kondavil Jaffna

தொடர்புகளுக்கு:-

077 117 0971



இணுவில் அருள்மிகு ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோயில்

விநாயக சதுர்த்தி தேர்த்திருவிழா விஞ்ஞாபனம்

31.08.2022 புதன்

விநாயக அடியார்களே!

விநாயகப் பெருமானின் அவதார தினமாக கொள்ளப்படும் ஆவணிசதுர்த்தி நன்நாளில் 21 வகையான வில்வங்ககளினால் அர்ச்சனை செய்து 21 தரம் விநாயகப்பெருமானை சுற்றி வலம் வந்து வணங்கி வழிபாடுசெய்து நினைத்த காரியங்கள் எல்லாம் வெற்றி பெறவும் எல்லா விதமான நன்மைகளையும் சௌபாக்கியங்களையும் பெற்றுக்கொள்வதற்கு எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் திருவருள்பாலித்துள்ளது.

- காலை 6.00 மணிக்கு பூஜை நடைபெறும்
- காலை 9.00 மணிக்கு மூலமூர்த்திக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெறும்.
- மதியம் 12.00 மணிக்கு பூஜை
- மதியம் 12.30 மணிக்கு சதுர்த்தி அர்ச்சனை நடைபெறும்
- மாலை 5.00 மணிக்கு பூஜை
- மாலை 5.30 மணிக்கு பஞ்சமுக அர்ச்சனை
- மாலை 6.00 மணிக்கு வசந்த மண்டப பூஜை
- இரவு 7.00 மணிக்கு அலங்கார சித்திர தேர்த்திருவிழா நடைபெறும்
- பக்த அடியார்கள் கற்பூரச் சட்டி ஏந்தி விநாயகரை வழிபடலாம்.

21 வகையான வில்வ பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு ஆலயத்தில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## மரண அறிவித்தல்



திருமதி நாகேஷ்வரி விவேகானந்தன் (சேவி அக்கா)

நேற்று (30.08.2022) ஆம் திகதி உதயன் பத்திரிகையில் 7 ஆம் பக்கத்தில் வெளிவந்த மரண அறிவித்தலின்

தோற்றம்: 23.01.1936 மறைவு: 28.08.2022

என திருத்தி வசிக்கவும்

விளம்பரதாரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச ஊழியர்களிடம் ரணில் மன்னிப்புக் கோரவேண்டும்

**நாடாளுமன்றத்தில் கஜேந்திரன் எம்.பி. வலியுறுத்து**

அரச ஊழியர்கள் விரும்பினால் வேலை செய்யுங்கள், விருப்பமில்லாதுவிட்டால் விட்டுச் செல்லுங்கள் என்று ஒரு ஜனாதிபதி சொல்வதென்பது தங்களுடைய பக்கத் தவறுகளை மறைத்துக் கொள்ளைக்காரர்களைப் பாதுகாக்கும் முயற்சி. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது கருத்துக்குப் பகிரங்க மன்னிப்புக்கோரவேண்டும் - இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மின்சாரக் கட்டண உயர்வு தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசியல்வாதிகளின் செயற்பாடுகளால் இந்த நாடு இன்று அதலபாதாளத்துக்குள் தள்ளப்பட்டுள்ளது. மஹிந்த, கோத்தாபய அரசுகள் மட்டுமல்ல அதற்கு முன்னர் ஆண்ட ஆட்சியாளர்களும் மேற்கொண்ட மோசடிகள், களவுகளும் இதற்குக் காரணம். நாட்டை அதலபாதாளத்துக்குள் தள்ளி இந்த நாட்டின் அனைத்து மக்களினதும் பொருளாதாரத்தையும் அழித்துவிட்டு நாடு வங்குரோத்து நிலைமையில் இருக்கின்றபோது அரச ஊழியர்களைப் பார்த்து விரும்பினால் வேலை செய்யுங்கள், விருப்பமில்லாது விட்டால் விட்டுச் செல்லுங்கள் என ஒரு ஜனாதிபதி சொல்வதென்பது தங்களுடைய பக்கத் தவறுகளை மறைத்துக் கொள்ளைக்காரர்களைப் பாதுகாத்துக்கொண்டு பழியை அரச ஊழியர்கள் மீது சுமத்தும் ஒரு முயற்சியாகும். இது அநாகரிகமான செயற்பாடு.

அரச ஊழியர்களிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பகிரங்க மன்னிப்புக் கோரவேண்டும். அதேபோன்று மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, பெற்றோலியத் திணைக்களத்தில் உள்ள அரைவாசிப் பேர் வினைத்திறன் அற்றவர்கள் எனக் கூறியுள்ளார்.

நாட்டின் இன்றைய நிலைக்கு அரசியல்வாதிகளே காரணம். அரச ஊழியர்களை நோக்கி விரல் நீட்டுவதை நிறுத்துங்கள். கடந்த காலங்களில் அரசியல் நோக்கங்களுக்காகத் திறமையற்றவர்களை அரச பதவிகளில் நியமித்தவர்கள் அரசியல்வாதிகள்தான். அவ்வாறு நியமித்துவிட்டு இப்போது ஏன் பழியை அவர்கள் மீது போடுகின்றீர்கள்?. மின்சக்தி அமைச்சரும் பகிரங்க மன்னிப்புக்கோரவேண்டும்.

நீங்கள் போரால் அழித்த வடக்கு, கிழக்கு மக்களை விலை உயர்வுகளாலும் மின் கட்டண அதிகரிப்புக்களாலும் மேலும் அழிக்கின்றீர்கள். கடந்த 13 வருடங்களாக அந்த மக்களைக் கட்டியெழுப்ப நீங்கள் எதையும் செய்யவில்லை. இவ்வாறான விலை அதிகரிப்புக்கள், கட்டண அதிகரிப்புக்களின்போது வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு விசேட திட்டம் ஒன்றைத் தமிழ்த் தலைவர்களோடு பேசி அரசு வகுக்க வேண்டும் - என்றார். (எ-22)

# சிறிலங்காவை துருப்புச்சீட்டாக பயன்படுத்திக்கொண்ட சீனா

## இந்திய முன்னாள் தேசிய பாதுகாப்பு பிரதி ஆலோசகர் குற்றச்சாட்டு

**கொழும்பு, ஓக.31**

**சீனா ஒரு பெரும் விளையாட்டுக்குரிய துருப்புச்சீட்டாக சிறிலங்காவைப் பயன்படுத்தியிருக்கின்றது. கடந்த சில வருடங்களாக சீனாவால் பின்பற்றப்பட்டுவந்த கொள்கையே சிறிலங்காவின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணமாக அமைந்திருக்கின்றது.**

இவ்வாறு இந்தியாவின் முன்னாள் தேசிய பாதுகாப்புப் பிரதி ஆலோசகர் பங்கஜ் ஷரன் கடுமையாக சாடியுள்ளார்.

அண்மைக்கால இராஜதந்திர விவகாரங்களை அடிப்படையாகக்கொண்டு கடந்த வார இறுதியில் மிகவும் காட்டமான கருத்தொன்றை வெளியிட்டிருந்த சிறிலங்காவுக்கான சீனத்தூதுவர் சி சென்ஹொங், 'வெளிநாடொன்றின் கப்பலை அதன் கோரிக்கைக்கு அமைவாக அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்குள் அல்லது வேறு துறைமுகத்துக்குள் அனுமதிப்பது என்பது தமது இறையாண்மைக்கு அமைவாக முற்றுமுழுதாக சிறிலங்கா அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமேயாகும்' என்று சுட்டிக்காட்டியிருந்தார்.

அதுமட்டுமன்றி எவ்வித ஆதாரங்களுமின்றி 'பாதுகாப்புசார் கரிசனைகள்' என்று கூறிக்கொண்டு வெளியகத்தரப்பினால் மேற்கொள்ளப்பட்ட இடையூறுகள் சிறிலங்காவின் இறையாண்மை மற்றும் சுயாதீனத்தன்மை ஆகியவற்றின்மீது ஏற்படுத்தப்பட்ட தலையீடு என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

அதற்குப் பதிலடி வழங்கியிருந்த இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகம், இலங்கைக்கான சீனத் தூதுவரின் இந்தியா மீதான பார்வை அவரது சொந்த நாட்டின் நடத்தையின் பிரதிபலிப்பாக இருக்கலாம் என்றும் ஆனால் இந்தியா அவ்வாறானதொரு நாடல்ல என்றும் சுட்டிக்காட்டியிருந்தது.

இந்தப்பின்னணியில் இந்த விவகாரம் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள இந்தியாவின் முன்னாள் தேசிய பாதுகாப்புப் பிரதி ஆலோசகர் பங்கஜ் ஷரன், 'கடந்த சில வருடங்களாக சீனாவால் பின்பற்றப்பட்டுவந்த கொள்கைகளே சிறிலங்காவின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணம் என்ற உண்மையைக் கருத்திற்கொண்டு இலங்கை மீதான கருணையை வெளிப்படுத்தி இவ்வாறானதொரு அறிக்கையை வெளியிடக்கூடிய தன்மையை சீனா கொண்டிருக்கின்றது என்பது மிகமுக்கியமானதாகும்.

சீனா ஒரு பெரும் விளையாட்டுக்குரிய துருப்புச்சீட்டாக இலங்கையைப் பயன்படுத்தியிருக்கின்றது. மிக நீண்டகாலமாகவே இலங்கையுடன் இந்தியா நல்லுறவைப் பேணிவந்திருப்பதுடன் அது எதிர்வருங்காலங்களிலும் தொடரும். எமது அயல்நாடுகளைக் கையாள்வதில் நாம் வேறுவிதமான அணுகுமுறையைக் கொண்டிருக்கின்றோம் - என்று தெரிவித்துள்ளார். (எ-இ)

# சிறிலங்கா குழுவுக்கு அலி சப்ரி தலைவர்!

கொழும்பு, ஓக.31

ஜெனிவாவில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்கவுள்ள சிறிலங்கா அரச குழுவுக்கு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தலைமை தாங்குவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு நடக்கவுள்ள சிறிலங்கா தொடர்பான விவாதத்தில் அவர் உரையாற்றுவார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஜெனிவா செல்லவுள்ள அரச குழுவில் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்சவும் பங்கேற்கவுள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. (எ-22)

# கல்முனை வடக்கு செயலக பெயரை நீக்கியது ஏன்?

## கலையரசன் எம்.பி. கேள்வி

கொழும்பு, ஓக.31

ஓர் அமைச்சரவைத் தீர்மானம் எடுக்கப்பட்ட பின்னர் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை நீக்குவதற்கான அதிகாரம் யாரால் வழங்கப்பட்டது? 33 வருடமாக செயற்பட்டுவரும் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தினுள் தெற்கு பிரதேச செயலாளரின் கை நீண்டிருப்பது எந்த வகையில் ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயம்?

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த. கலையரசன் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மின்சாரக் கட்டண உயர்வு தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் செயற்பாடுகளை இல்லாமல் செய்கின்ற விடயத்தில் முஸ்லிம் அரசியல்வாதிகளும் சில அடிப்படைவாத சிந்தனை கொண்ட அமைப்பினரும் தொடர்ச்சியாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இலங்கையில் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் உத்தியோ



கபூர்வ இணையத்தளத்திலிருந்து கல்முனை வடக்கு பிரதேச செயலகம் நீக்கப்பட்டிருப்பதாக நான் அறிகின்றேன். ஓர் அமைச்சரவைத் தீர்மானம் எடுக்கப்பட்டதன் பின்னர் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை நீக்குவதற்கான அதிகாரம் யாரால் வழங்கப்பட்டிருக்கின்றது?

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் என்பது தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசம். 39 ஆயிரம் தமிழ் மக்கள் வாழ்கின்ற பிரதேச செயலகம்தான் இந்தக் கல்முனை வடக்கு பிரதேச செயலகம். இதன் நிர்வாக நடைமுறையைத் தொடர்ச்சியாக முஸ்லிம் பிரதிநிதிகள்தான் முடக்கி வருகின்றனர். தமிழ் மக்களைக் கூறு போடும் முயற்சியில் இந்த முஸ்லிம் பிரதிநிதிகள் ஈடுபட்டுள்ளனர்.

புதிய பிரதமரின் இந்தக் குறுகிய பதவிக் காலத்திலேயே இரு முக்கிய சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. ஒன்று உள்நாட்டலுவல்கள் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து கல்முனை வடக்கு பிரதேச செயலகம் நீக்கப்பட்டிருப்பது. அடுத்து பதிவாளர் நாயகத்திடமிருந்து காணிப் பதிவக நடவடிக்கையை கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திடமிருந்து நீக்கும் ஒரு கட்டளை பிறப்பிக்கட்டுள்ளது. ஏன் தொடர்ச்சியாகக் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் மாத்திரம் இந்த நிர்வாக மோசடி இடம்பெறுகின்றது? இந்த உயரிய சபையில் நாம் மக்களின் பிரச்சினைகளைத் தாம் பேசுகின்றோம். ஆனால், அதற்கு தீர்வு கிடைக்கின்றதா என்பது பெரும் கேள்வியே. தயவு செய்து கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் கீழ் வாழ்கின்ற மக்களுக்கு ஒரு விடிவைக் கொடுங்கள் என்று கேட்கின்றேன். அவர்களின் வாழ்விடங்களை பாதுகாக்கக் கூடிய வகையில் தீர்வை வழங்குங்கள் - என்றார். (எ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## 36 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா
## 06.10.2022, 07.10.2022 மற்றும் 08.10.2022

உயர் பட்டங்கள், பட்டங்கள், மற்றும் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ்கள் ஆகியவற்றை தகுதியளிப்பதற் காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 36 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா (06.10.2022, 07.10.2022 மற்றும் 08.10.2022 ஆம் திகதிகளில்) நடைபெறவுள்ளது. பின்வரும் தேர்வுகளில் சித்தியடைந்து 36 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் பட்டங்களைப் பெறத் தகுதியுடையவர்களை 01.09.2022 ஆம் திகதியிலிருந்து 12.09.2022 ஆம் திகதி வரை தமது வேண்டுகோள்களை கீழ்வரும் அறிவுறுத்தல்களுக்கமைய சமர்ப்பிக்குமாறு கோருகின்றேன். மேலதிக விபரங்களுக்குப் பல்கலைக்கழக இணையத்தளம் www.jfn.ac.lk இனைப் பார்வையிடவும்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

01. கலாநிதி
02. முதுமெய்யியல்மாணி
03. முது வியாபார நிர்வாகமாணி -2019
04. சூழல் முகாமைத்துவத்தில் முதுவிஞ்ஞானமாணி - 2021
05. சுகாதார முகாமைத்துவத்தில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ்
06. கல்வியியலில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் - 2020 (பகுதி நேரம்)
07. கல்வியியலில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் - 2019 (முழு நேரம்)
08. வைத்தியமாணி சத்திரசிகிச்சைமாணி – 38ஆம் அணி
09. பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்பு - 2020
10. தாதியியல் விஞ்ஞான சிறப்புமாணி – 2019
11. மருந்தகவியல் சிறப்புமாணி – 2019
12. மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞான சிறப்புமாணி - 2019
13. விஞ்ஞானமாணி சிறப்பு - 2019
14. பிரயோக விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி – 2019
15. கணனி விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி – 2019
16. விஞ்ஞானமாணி – 2019
17. கணனி விஞ்ஞானமாணி – 2019
18. கணனி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி – 2019
19. வியாபார நிர்வாகச் சிறப்புமாணி – 2019
20. வணிக சிறப்புமாணி – 2019
21. வணிகமாணி -2019
22. வியாபார நிர்வாகமாணி – 2019
23. உயிர்முறைமைகள் சிறப்பு தொழில்நுட்பமாணி - 2019
24. பொறியியல் சிறப்பு தொழில்நுட்பமாணி – 2019
25. சங்கீதத்தில் சிறப்பு நுண்கலைமாணி – 2018
26. சித்திரமும் வடிவமைப்பிலும் சிறப்பு நுண்கலைமாணி - 2018
27. விவசாய விஞ்ஞானமாணி சிறப்பு - 2019
28. சிறப்புக் கலைமாணி – 2019
29. சிறப்புக் கலைமாணி - 2018
30. பொதுக்கலைமாணி – 2018
31. மொழிபெயர்ப்புக் கற்கைகளில் சிறப்புக் கலைமாணி - 2019

**வவுனியா வளாகம்**

01. செயற்திட்ட முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவமாணி – 2019
02. வியாபார முகாமைத்துவமாணி (பொது) – 2019
03. சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவ சிறப்புமாணி - 2019
04. கணக்கியல் மற்றும் நிதியியலில் வியாபார முகாமைத்துவ சிறப்புமாணி – 2019
05. மனிதவள முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவ சிறப்புமாணி – 2019
06. வியாபார பொருளியலில் வியாபார முகாமைத்துவ சிறப்புமாணி – 2019
07. தகவல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞானமாணி – 2019
08. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி – 2019
09. பிரயோக கணிதம் கணிப்பிடலில் விஞ்ஞானமாணி – 2019
10. சூழல் விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி – 2019
11. கணிணி விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி – 2019
12. சூழல் விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி – 2019
13. தகவல் தொழில்நுட்பத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி -2019

**அறிவுறுத்தல்கள்:**

**1. வேண்டுகோள் படிவங்களைச் சமர்ப்பித்தல்**

அனைத்து விண்ணப்பதாரிகளும் www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத் தளத்தின் ஊடாக வேண்டுகோள் படிவத்தினை 01.09.2022 ஆம் திகதியிலிருந்து 12.09.2022 ஆம் திகதி வரை நிகழ்நிலையாக நிரப்பி விண்ணப்பித்தல் வேண்டும். குறிப்பிட்ட செயல்முறையில் பின்வரும் ஆவணங்களைத் தரவேற்றம் செய்யும் போது ஒவ்வொரு ஆவணமும் 2 MB இற்கு மேற்படாது. 'Jpeg' அல்லது 'jpg' முறைவடிவில் இருத்தல் வேண்டும்.

**1. பற்றுச்சீட்டு**

**2. பட்டச்சான்றிதழில் 'பெயரினை உறுதிப்படுத்தும்' விண்ணப்பம்**

நிகழ்நிலையில் பூரணப்படுத்தப்பட்ட வேண்டுகோள் படிவத்தினை தரவிறக்கம் செய்து கையொப்பமிட்டு மேற்கூறப்பட்ட ஆவணங்களுடன் இணைத்து பதிவுத்தபால் மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு 12.09.2022 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். **கடித உறையின் இடதுபக்க மூலையில் "36 ஆவது பட்டமளிப்பு விழா, (மாணவர் பதிவிலக்கம்:.........)"** எனக் குறிப்பிடவும். **அஞ்சல் முகவரி : உதவிப் பதிவாளர் / அனுமதிகள், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

**2. கட்டணம் செலுத்தும் முறை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கணக்கிலக்கத்திற்குச் சேரக் கூடியதாக ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். வங்கிப் பற்றுச் சீட்டில் பெயரையும் மாணவர் பதிவு இலக்கத்தையும் தெளிவாகக் குறிப்பிடவும்.

| கட்டணம் மற்றும் வங்கிக் கணக்கிலக்க விபரம் | | |
|---|---|---|
| கட்டணம் | பட்டதாரிகள் | பட்டப்பின் படிப்பு பட்டதாரிகள் |
| பட்டமளிப்பு விழாக்கட்டணம் | 1200 | 2300 |
| பட்ட மேலங்கிக் கட்டணம் | 1000 | 1200 |
| பட்டச்சான்றிதழ்க் கட்டணம் | 900 | 1200 |
| புகைப்படக் கட்டணம் | 900 | 900 |
| **மொத்தக் கட்டணம்** | **4000** | **5600** |
| மக்கள் வங்கி கணக்கிலக்கம் (குறிப்பிலக்கம்) | | |
| நேரில் சமுகமளிப்பவர் | 970000052100308 | 970000082100310 |
| சமுகமளிக்காதவர் | 970000052100340 | 970000082100351 |

பட்டமளிப்பிற்கு நேரில் சமுகமளிப்போரோ சமுகமளிக்காதோரோ பொருத்தமான முறையில் மேலே குறிப்பிட்டவாறு தங்கள் பட்டங்களிற்கு ஏற்றவாறு பொருத்தமான குறிப்பிலக்கத்தை வங்கிப் பற்றுச் சீட்டில் குறிப்பிடவும். மேற் குறிப்பிட்டபடி பொருத்தமான குறிப்பிலக்கம் குறிப்பிடப்படாத எந்த ஒரு பற்றுச்சீட்டும் வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதனைக் குறித்துக் கொள்க.

**குறிப்பு:** பட்டமளிப்பு விழாவிற்கு சமுகமளிக்காது பட்டச் சான்றிதழைப் பெற விரும்பும் பட்டதாரிகள் மேலங்கிக்கான கட்டணத்தையும் புகைப்படத்திற்கான கட்டணத்தையும் செலுத்தத் தேவையில்லை.

**3. பட்டதாரி மேலங்கி**

நேரடியாக சமுகமளித்து பட்டம் பெறுபவர்கள் அவர்களுக்கான பட்டதாரி மேலங்கிகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தின் ஆவணக்காப்பகத்தில் பெற்றுக் கொள்ள முடியும். பட்டதாரி மேலங்கி விநியோகம் தொடர்பான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

**4. பல்கலைக்கழக நிலுவைகள்**

பல்கலைக்கழகத்திற்கு ஏதாவது நிலுவைகள் அல்லது கொடுப்பனவுகள் செலுத்தப்படாதிருந்தால் அவ் விண்ணப்பதாரிக்கு பட்டமளிப்புச் சான்றிதழ் வழங்கப்படமாட்டாது.

மேலதிக தகவல்களுக்கு 021 222 6714 அல்லது admissions@univ.jfn.ac.lk எனும் மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ளவும்.

வேண்டுகோள் படிவங்கள் சமர்ப்பிக்க வேண்டிய காலம்: 01.09.2022 இலிருந்து 12.09.2022 வரை இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் வேண்டுகோள்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**பதிவாளர்**

# மரண அறிவித்தல்



தோற்றம் 16 - 04 - 1955

மறைவு 26 - 08 - 2022

## திருமதி சந்திரலேகா சகாதேவன்

யாழ். திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சந்திரலேகா சகாதேவன் கடந்த (26.08.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா தெய்வானைபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற துரையப்பா இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சகாதேவன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஜெயவீரசிங்கம், திசவீரசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலாதேவி, தவமணிதேவி (ராணி), சறோஜினிதேவி (சரோ), செல்வராணி (கிளி) ஆகியோரின் சகோதரியும், சங்கர், சுதாகர், ஷாமினி, சுதர்சினி, கஜீபன் ஆகியோரின் அன்புத் தாயாரும், தாட்சாயினி, ஜெயமோகனா, சஞ்சீவ், சுதாபவான் ஆகியோரின் மாமியாரும், சாய்பிரவீன், சுனன்யா, சேகரன், மேனுஜா, சகானா, சானுயா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2022) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.30 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி பிராமன உயர்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.5, மதவடி லேன், திருநெல்வேலி.**

**077 662 5143 (சுதா)**
**077 729 3248 (சங்கர்)**

**தகவல் : குடும்பத்தினர்**

(CS 20544) (3/6)

# மரண அறிவித்தல்



தோற்றம் 17 - 05 - 1949

மறைவு 28 - 08 - 2022

## திருமதி ஜெயசுந்தரி தர்மகுலசிங்கம்
### (இராசாத்தியக்கா)

யாழ். திருநெல்வேலி வடக்கு கலாசாலை வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயசுந்தரி தர்மகுலசிங்கம் அவர்கள் கடந்த (28.08.2022) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சிவஞானசுந்தரம் சிவபாக்கியம் தம்பதிகளின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், தர்மகுலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், கோபிகிருஷ்ணா (மலேசியா), தனஞ்சனி (அவுஸ்திரேலியா), ஹரிகிருஷ்ணா, சாயிகிருஷ்ணா ஆகியோரின் பாசமிகு தாயாரும், சாலினி (மலேசியா), நிசாந் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஸஹிஷ்ணு, ஆருஷன், ஆரணியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜெயலோஜனா, காலஞ்சென்ற ஜெயசீலன், ஜெயபாமினி, ஜெயகௌரி, ஜெயமனோகரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுந்தரலிங்கம், ஸ்ரீஸ்கந்தராஜா, காலஞ்சென்ற முருகமூர்த்தி, இலங்கேஸ்வரன், காலஞ்சென்றவர்களான பூபாலசிங்கம், யோகேஸ்வரி, மகேஸ்வரி மற்றும் புவனேஸ்வரி, தனபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (01.09.2022) வியாழக்கிழமை மு.ப 11:00 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**ஹரிகிருஷ்ணா - மகன் Mobile : +94775730308**
**சாயிகிருஷ்ணா - மகன் Mobile : +94775756104**

**தகவல் : குடும்பத்தினர்**

(CS 20501) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INVITATION FOR BID (IFB 2022)

**Jaffna Municipal Council**
**DEPARTMENT OF HINDU RELIGIOUS & CULTURAL AFFAIRS FUND**
**Improvement of Navalar Cultural Hall**
**(JMC/WD/Navalar Cultural Hall/2022-03)**

1. Jaffna Municipal Council has received credit from the Domestic Republic of Sri Lanka Budget2022 towards the cost of Department of Hindu Religious & Cultural Affairs Building Renovation and intends to apply part of the proceeds of this credit to payment under the contract for **Improvement of Navalar Cultural Hall.**
2. The Chairman, Local Authority Procurement Committee on behalf of the **Municipal Council, Jaffna, Northern** Province, now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.
3. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
4. Interested eligible bidders may obtain further information from **Mayor/Commissioner, Municipal Council, Jaffna, (Tel.No.021-221 6468, Fax.021-222 2334)** on any working day **from 9:00 hrs to 16:00 hrs since 30th August 2022 till 13thof September 2022.**
5. Qualification requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Section 5 (Schedule) of the bidding documents.
6. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall meet the CIDA registration and qualification requirements listed below. Additional details are provided in the Bidding Documents.
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the address below **from 30thAugust 2022 till 12th of September 2022** from **9:00 hrs. to 14:30 hrs** on working days upon payment of a non-refundable fee of **Rs. 3,500.00** for each. The method of payment should be by cash.
8. Bids shall be delivered in duplicate directly or sent by Registered Post to the address below on or before **14:30 hrs on 13th of September 2022.** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidders' representatives who choose to attend. Bids must be accompanied by a bid security as per the information given in the table.
9. Pre-bid meeting will be held on **07thSeptember 2022 at 10:00 hrsin the Municipal** Council, Jaffna. Interested bidders may attend the meeting at their own expense.

| No | Contract No | Description of work | Estimated Civil Cost Rs(Million) | Contract Period | Required Grade | Validity Period of bid From the last date bid submission | Required Bid security | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Security Amount (Rs) | Validity Period |
| 1 | **JMC/WD/ Navalar Cultural Hall/2022-03** | Improvement of Navalar Cultural Hall | 8.929 | 99 Days | C7 or above (Building ) | **77Days** | **90,000.00** | **27.12.2022** |

**Chairman,**
**Local Authority Procurement Committee,**
**Municipal Council,**
**Jaffna, Northern Province.**
**30.08.2022.**

(cr.37947) (2.6)

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் மாபிள் பதித்து தரப்படும். ஒரு சதுர அடி - 80 ரூபாய் பூச்சுவேலை. கட்டுவேலைகளும் செய்துதரப்படும்.

**077 334 1281**

## அன்பு திருமண சேவை

பதிவு இல.RIN/BR/1139

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ப டொக்டர், எஞ்சினியர், அரச உத்தியோகம் மற்றும் டிவோஸ் மணமகன்/ மணமகள் தேவையெனில் எம்முடன் தொடர்புகொள்ளவும். வெளிநாட்டு மணமகன் /மணமகள் உள்ளனர்.

தொடர்பு: **077 844 8942** யாழ்ப்பாணம்

(cs 20552) (2.6)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




**திருமதி யசோ சந்திரபாலன்** **திருமதி ஹம்சத்வனி துஷித்குமார்**

எமது பாடசாலை ஆசிரியர்களான **திருமதி யசோ சந்திரபாலன்** கலைமானிப் பட்டத்தினையும், திருமதி ஹம்சத்வனி துஷித்குமார் Naional Diploma in English (SLATE) பட்டத்தினையும் பெற்றமைக்காக இருவரையும் வாழ்த்துவதோடு மென்மேலும் பல பட்டங்களைப் பெற்று உயர எம் மனமார்ந்த வாழ்த்துக்கள்

**பாடசாலை சமூகம்**
**யா/ ஊர்காவற்றுறை**
**றோ.க.தமிழ் ஆண்கள் பாடசாலை**


(cs.20584) (2.6)

# ஐந்தாம் ஆண்டு நினைவேந்தல்

**31.08.2022**

## அமரர் இ.அருள்நேசன்

**(முன்னாள் எழுதுவினைஞர் மக்கள் வங்கி - மன்னார், போதகர் கிறிஸ்தவ குடும்பசபை - யாழ்ப்பாணம்)**



கணப்பொழுதும் பிரியாமல்
கண்கலங்காமல் காத்த என் அப்பா
கணப்பொழுதில் எம்மை விட்டுச் சென்று
கண்ணீர் கடலில் மூழ்கித் தத்தளிக்க வைத்தீர்களே
மீள முடியாத துன்பத்தில் எம்மை ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்டீர்களோ
ஆறவும் முடியவில்லை வாழவும் முடியவில்லை
துணையற்ற வாழ்வு துயரம் நிறைந்ததையா
உரமான என் உள்ளம் உடைந்து விட்டதையா
உறவுகள் ஆயிரம் இருந்தும் உங்களைப் போல் வருமா
மீண்டும் எம்மிடம் வந்துவிடுவீர்கள் என்று
வழிமேல் விழிவைத்து காத்திருக்கிறேன்.
வந்துவிடுங்கள் விரைவில்

**மனைவி, மகள். மருமகன்**
**200, [illegible]ற் பெனடிற்றோட், அரியாலை மேற்கு,**
**யாழ்ப்பாணம்.**

(CS 20563) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலையாள்கள் தேவை

வீட்டில் தங்கி நின்று வேலை பார்ப்பதற்கு ஆட்கள் தேவை.

பிரபல்யமான கடை ஒன்றிற்கு வேலைக்கு ஆட்கள் தேவை.

**077 282 4648**

# பழைய மாணவர் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 31

மானிப்பாய் மகளிர் கல்லூரியின் பழைய மாணவர்களுக்கான பொதுக்கூட்டம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப.10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரி பழைய மாணவர் சங்கத்தில் தற்போது உள்ளவர்கள், புதிதாக இணைய விரும்புபவர்கள் அனைவரையும் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கல்லூரியின் அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார். (எ-14)

## பெண் உதவியாளர் [பில் கிளாக்] தேவை

ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் பல் கட்டும் நிலையத்திற்கு தகைமை O/L யாழ்.நகர எல்லைக்குள் உட்பட்டவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.

**076 286 9558**

## leads

Where Children Come First...

**We are a Christian based community development organization that partners with people of all faiths. We operate island-wide, focusing on the most vulnerable citizens and communities through development, humanitarian work and advocacy.**

## Vacancies

**Project officer – Disaster Risk Reduction (Kilinochchi & Trincomalee District)**

- G.C.E. Advanced Level
- A diploma in disaster management or Disaster risk reduction from a reputed institute is desirable.
- 2 - 3 years' experience in community development work
- Ability to plan, implement and monitor project activities independently
- Should be computer literate, in word and excel
- Ability to write reports
- Ability to work with government stake holders in the field
- Good written and oral communication skills in English and Tamil
- Should be a Team player

**Project officer – Social Development (Jaffna, Kilinochchi, Mullaitivu, Mannar Districts)**

- G.C.E. Advanced Level
- A diploma in agriculture from a reputed institute is desirable.
- 3 - 5 years' experience in social development work preferably in agriculture
- Ability to plan, implement and monitor project activities independently
- Should be computer literate, in word and excel
- Ability to write reports
- Ability to work with government stake holders and mobilize communities
- Good written and oral communication skills in English and Tamil
- Should be a Team player

Address to: Coordinator, LEADS,
7/2, Kumarasami road, Kanesapuram, Kilinochchi
Email to: suganthan@leads.lk
Contact No: 0773660931, Closing date: 09.09.2022

# கண்ணீர் அஞ்சலி



யாழ். பல்கலைக்கழகத்தில் விலங்கியல் துறையில் கடமையாற்றும் **ப.பத்மரூபன்** அவர்களின் தந்தையார்

## திரு. நல்லையா பத்மநாதன்

அவர்கள் கடந்த (29.08.2022) திங்கட்கிழமை இறைபதமெய்தினார்.
அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**தலைவர், ஊழியர்கள்**
**விலங்கியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 . 03 . 1939 | 30 . 08 . 2022 |



## பொன்னையா சிவலிங்கம்

(ஓய்வு பெற்ற அதிபர்)

வேலணை வடக்கு 5 ஆம் வட்டாரம் சோளாவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது 66 /14, இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சிவலிங்கம் நேற்று (30.08.2022) செவ்வாய்க்கிழமை காலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா (ஓய்வுபெற்ற - அதிபர்) இலகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான க.சி.மயில்வாகனம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், அரவிந்தன் (U.K), அமிர்தினி (அமுதா - கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், லக்சிகா (U.K), சாந்தரூபன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், திவ்வியா (கனடா), நிசாந் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**66/14, இந்து மகளிர் ஒழுங்கை,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**021 222 1620,**
**077 593 9777**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# விநாயகர் சதுர்த்தி

## விசேட பூசை

யாழ்., ஓக. 31


ஆவணி சதுர்த்தியை முன்னிட்டு கொழும்புத்துறை நேர்த விநாயகர் ஆலயத்தில் இன்று காலை 9 மணிக்கு விசேட அபிஷேக பூசைகள் இடம்பெற்று விநாயகப் பெருமான் வீதிவலம் வருதலும் இடம்பெறவுள்ளது. (எ-14-17)

* * * *

கோப்பாய் வடக்கு வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் விநாயகர் சதுர்த்தி உற்சவத்தை முன்னிட்டு இன்று காலை சிறப்புப் பூசை இடம்பெற்று 108 சங்காபிஷேகம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து பிற்பகல் பூசைகள் இடம்பெற்று விநாயகப் பெருமான் வீதி வலம் வரவுள்ளார். (எ-14-17)

# மரண அறிவித்தல்

| அன்னை மடியில் | ஆண்டவன் மடியில் |
|---|---|
| 09 - 04 - 1952 | 30 - 08 - 2022 |



## போதகர் அன்ரன் தேவதாஸ்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த போதகர் அன்ரன் தேவதாஸ் அவர்கள் நேற்று (30.08.2022) காலை 7.45 மணியளவில் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி நிக்கொலஸ் தேவதாஸ் தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற திரு. திருமதி ஐசக் இராஜசூரியர் தம்பதியினரின் அன்பு மருமகனும்,திருமதி பிரேமரூபினி அன்ரன் அவர்களின் பாசமிகு கணவரும், ஐசக் யேசுநேசன் (Zambia),அன்ட்றூ தேவசேயன் (கொழும்பு), இவாஞ்சலா தேவப்பிரியா (டென்மார்க்), கெர்சோம் அருட்செல்வன் (கனடா) மற்றும் டெபோரா ஜெபசீலன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் றொமேலா அன்ரன், டனி டானியேல் (டென்மார்க்), ஏஞ்சலின் அன்ரன் (கனடா) ஜேம்ஸ் ஜெபசீலன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், டேவிட், டிசான், டெவினா, மிக்கேலா, நற்றானியா, நிரேயா மற்றும் ஐசாயா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தகவல் :**
**அன்ட்றூ தேவசேயன் (மகன்)**
**0774817601**

(CS 20565) (3/6)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07 . 10 . 1937 | 10 . 09 . 2021 |



அமரர்

## செல்லத்துரை சுப்பிரமணியம் (JP)

(ஓய்வுநிலை நில அளவை அத்தியட்சகர்)

திதி: சதுர்த்தி

என்றும் உங்கள் நினைவுடன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

**224/21, மில்னர் ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம்.**

(cs.46253) (2.6)

**மனைவி, பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரற்ற தண்ணீர் விநியோகத்தால் பூநகரிப் பகுதி மக்கள் பாதிப்பு!

*நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை மீது சரமாரியாகக் குற்றச்சாட்டு*

**கிளிநொச்சி, ஓக. 31**

**கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரிப் பிரதேசத்தில் குடிதண்ணீர் விநியோகம் சீரான முறையில் இடம்பெறுவதில்லை என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**

இதுதொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரிப் பிரதேச மக்கள் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் குடிதண்ணீரை நம்பியே வாழ்கின்றனர். அத்துடன் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசத்தில் மலையாளபுரம், விவே கானந்தநகர், பரந்தன், உமையாள்புரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களும் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் குடிதண் ணீரையே நம்பியுள்ள நிலையில் நாளாந்தம் ஒழுங்கற்ற முறையிலேயே குடிதண்ணீர் விநியோகம் இடம்பெறுகிறது. கடந்த சில நாள்களாக குடிதண்ணீர் விநியோகம் இடம்பெறாத சந்தர்ப்பங்களும் உண்டு. ஆகவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் உடன் நடவடிக்கை மேற்கொண்டு சீரான குடிதண்ணீர் விநியோகத்துக்கு வழி வகுக்க வேண்டும் - என்றனர்.

இதுதொடர்பில் தேசிய நீர் வழங்கல் வடி காலமைப்புச்சபையின் கிளிநொச்சி அலுவலகத்தை தொடர்பு கொண்டு கேட்டபோது,

தற்போது நடைமுறையில் உள்ள மின்சாரத் துண்டிப்புக் காரணமாக நாள் ஒன்றுக்குத் தேவையான நீரை கிளிநொச்சி காக்கா கடைச் சந்தியில் உள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்தி லிருந்து சுத்திகரித்து வழங்க முடியாதுள்ளது.

ஏனைய மாவட்டங்களைப் போன்று நீர் சுத்திகரிப்பு நிலையத்துக்கு மாத்திரம் தடையின்றிய மின்சார விநியோகம் வழங்கப்பட்டால் நாமும் பொதுமக்களுக்கு சீரான முறையில் தேவையான அளவு தண்ணீரை வழங்கமுடியும். இதுதொடர்பான நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றோம் - என்றனர். (ச-13)

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு 23 - 04 - 1943

உதிர்வு 01 - 08 - 2022



பலாலி கிழக்கு பலாலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கடந்த 01.08.2022 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர் தம்பையா இளையதம்பி

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (31.08.2022) புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வன்னியசிங்கம் வீதி, ஆவரங்கால். (CS 46158) (3/6)

குடும்பத்தினர் 076 985 0406

# பிரகாஸ் நினைவாக இரத்தான முகாம்



யாழ்ப்பாணம், ஓக.31

கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி உயிரிழந்த இளம் ஊடகவியலாளர் ஞானப்பிரகாசம் பிரகாஸின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணத்தில் இரத்தான முகாம் நடத்தப் பட்டது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இந்த இரத்தான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது பலர் இரத்ததானம் வழங்கினர். சிறுவயது முதல் தசைத்திறன் குறைப்பாட்டால் பாதிக்கப்பட்டிருந்த ஞா.பிரகாஸ், நடமாட முடியாத நிலைமையில் இருந்தபோதும், ஊடகத்துறையில் தனக்கென ஓர் இடத்தைத் தக்கவைத்திருந்தார். கடந்த ஆண்டு கொரோனாத் தொற்றுக்குள்ளான அவர், சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். (எ-27)

# என்.வி.கியூ-4 கற்கைக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஓக.31

யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியில் 2022 ஆம் ஆண்டுக்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் என்.வி.கியூ-4 கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தக் கற்கைநெறி துறைசார் வெளிக்களப் பயிற்சி அடங்கலாக முழுநேரம் ஒரு வருடம் கற்பிக்கப்படும். விண்ணப்பதாரர்கள் க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது கணிதம், தமிழ், ஆங்கிலம் அடங்கலாக ஆறு பாடங்கள் சித்தியடைந்திருத்தல்வேண்டும்.

கற்கைநெறி முற்றிலும் இலவசமானது என்பதுடன் போக்குவரத்து பருவகாலச் சீட்டு என்பன பெற்றுக்கொடுக்கப்படும்.

கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் தொழில்நுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களுக்கு நேரடியாக தொழில்நுட்பவியல் கல்லூரியுடன் அல்லது 021-2220028, 021-2222358 எனும் அலைபேசி இலக்கத்தின் ஊடாகத் தொடர்புகொள்ளலாம். (எ-14)

# சம்பந்தப்பிள்ளையாருக்கு நாளை கொடியேற்றம்

ஆனைக்கோட்டை ஸ்ரீ வரத விக்ன விநாயகர் (சம்பந்தப்பிள்ளையார்) ஆலயப் பெருந்திருவிழா நாளை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

பத்துத் தினங்கள் கொண்ட இந்தப் பெருந்திருவிழாவில் 9ஆம் திகதி வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு விநாயகப்பெருமான் தேரில் எழுந்தருளி அடியவர்கள் புடைசூழ வலம்வருதலும் மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

பெருந்திருவிழா ஆரம்பமாவதற்கு முதல் நாளான இன்று ஆவணி சதுர்த்தியை முன்னிட்டு பிற்பகல் 3மணிக்கு விசேட பூசையும் இடம் பெறவுள்ளது.



# 'பன்னாட்டுக் குற்றங்கள்' புத்தகம் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக.31

இ.நா.ஸ்ரீஞானேஸ்வரன் எழுதிய 'பன்னாட்டுக் குற்றங்கள்' என்ற புத்தகத்தின் வெளியீட்டு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறைத் தலைவரும் பேராசிரியருமான சி.ரகுராம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், 'பன்னாட்டுக் குற்றங்களும் தமிழினமும்' எனும் தலைப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சிறப்புரையாற்றினார். செ.விந்தன் புத்தகத்தை வெளியிட்டு வைக்க முதற்பிரதியை நாகமணி இராமநாதன் பெற்றுக்கொண்டார். புத்தகத்துக்கான மதிப்பாய்வை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல்துறைத் தலைவரும் பேராசிரியருமான கே.ரி.கணேசலிங்கம் வழங்கினார்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ், கட்சியின் உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-27,125)

# கற்பகப்பிள்ளையார் விநாயகர் சதுர்த்தி தீர்த்தவாரி

யாழ்ப்பாணம், ஓக.31

அருள்மிகு கற்பகப்பிள்ளையார் சதுர்த்தி விசேட தீர்த்தவாரி இன்று புதன்கிழமை காலை [illegible] 4 மணிவரை நடைபெறவுள்ளது.

பக்தர்கள் ஆசாரசீலர்களாக கற்பகப்பிள்ளையார் புஷ்கரணியில் இருந்து புனித தீர்த்தத்தை குடங்களில் எடுத்து வந்து தங்களின் கைகளாலே தீர்த்தவாரி செய்தலும் தொடர்ந்து நடைபெறும் வசந்த மண்டபப் பூசைசையைத் தொடர்ந்து பெருமான் வீதியுலா வருதலும் நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FUEL TANK தேவை

2000 லீற்றருக்கு மேற்பட்ட கொள்ளளவைக் கொண்ட எரிபொருள் நிரப்பு தொட்டி (FUEL TANK) தேவை.



புதிதாகவோ அல்லது பாவித்த நல்ல நிலையில் விற்பனை செய்வோர் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு:- **071 411 5002**


# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 02.08.2022 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

## அமரர் சிவப்பிரகாசம் கந்தசாமி

(உரிமையாளர் திருப்பதி கிறீம் ஹவுஸ் மற்றும் ஶ்ரீஸ் கொமினிக்கேசன் – குருமன்காடு, வவுனியா)

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 30.08.2022 செவ்வாக்கிழமை கீரிமலை புனித கீர்த்தக் கரையில் இடம்பெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (01.09.2022) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நண்பகல் 12மணியளவில் இடம்பெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவுச் செய்தி கேட்டு நேரில் வருகை தந்தும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் ஏனைய பல வழிகளில் உதவியவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இல. 47 காளிகோவில் வீதி,**
**குருமன்காடு,**
**வவுனியா.**

**குடும்பத்தினர்**
**0777363175**

# 90 ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த 03.06.2022 (வெள்ளிக்கிழமை)
அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

**அமரர்**


## அப்பாத்துரை சண்முகநாதன்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 16.03.1947 | 03.06.2022 |

நாட்கள் 90 சென்றிடினும்
மறைந்திடுமா உன் நினைவு
பரிதவிக்குதப்பா எம் நெஞ்சம்
உன் புன்சிரிப்பைக் காண
விழியோரக் கண்ணீருடன்
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

51/1 இலந்தைக்குளம் வீதி, அரியாலை. குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## திரு. சின்னத்துரை மகிமைசேனன்

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு.சின்னத்துரை மகிமைசேனன் கடந்த (29.08.2022) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை யோகம்மாள் ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும், இராசையா (காலஞ்சென்ற), மகேஸ்வரி ஆகியோரின் மூத்த மருமகனும், அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், பதுமசேனா (காலஞ்சென்ற), கருணசேனன், சமரசேனன், யோகசேனன், ஶ்ரீகலாசேனை, அருட்கலாசேனன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிரபசேனன், கிருபசேனன், கஜேந்திரசேனன், திஸானி, தனுயியா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெசிந்தன், மயூரி, ஜசிந்தா, லோசனா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சர்விகா, கேதவ்சேனன், கிருனிகா ஆகியோரின் அன்பு அப்பப்பாவும், திஜெனி, ஜெய்சரண் ஆகியோரின் அன்பு அம்மப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.09.2022) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக இணுவில் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 075 9493**

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10.08.1941 | 27.08.2022 |



## வல்லிபுரம் நடராசா

(ஓய்வுபெற்ற புகையிரத களஞ்சிய பொறுப்பாளர்)

யாழ். சிறுப்பிட்டி மத்தி நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் நடராசா அவர்கள் 27.08.2022 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற வல்லிபுரம், ஆசைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு புதல்வரும், காலஞ்சென்ற கனகசபை, கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பூமாதேவி அவர்களின் அன்புக் கணவரும், கல்பனா (லண்டன்), கஜனா (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற கமலகுமார் (லண்டன்) மற்றும் கிருஷ்ணகுமார் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கோபிகா (லண்டன்), ஜதுஷா (லண்டன்), கிஷாந் (டென்மார்க்), காயத்திரி (லண்டன்), சபீனா (டென்மார்க்) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற குமாரசாமி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, அம்பலவாணர், மகேஸ்வரி மற்றும் இராஜரத்தினம், புனிதவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (01.09.2022) வியாழக்கிழமை மு.ப 10:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் சிறுப்பிட்டி கொண்டைகுலுக்கி குடும்ப இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாணய...

நாட்டில் நிலவும் பொருளாதார நலிவு நிலை, விவசாயம் மற்றும் மீன்பிடித் துறைகளை மீளக்கட்டமைக்கும் திட்டங்கள், பொருண்மியத்தில் நலிவடைந்தோருக்கான நிதியுதவிகள், உணவுப் பணவீக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவூட்டல், அரசாங்கத்தின் வற் வரி அதிகரிப்பு, அரச அலுவலர்களின் ஓய்வு வயதெல்லையை 60 வயதோடு மட்டுப்படுத்தல் உள்ளிட்ட விடயங்களில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு இந்த இடைக்கால வரவு - செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார மேம்பாட்டுக்காக பல்வேறு மறுசீரமைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றுக்கமைய பொருளாதார வளர்ச்சி வேகத்தை 5 சதவீதத்தால் அதிகரிக்கவும், 2023 ஆம் ஆண்டை பிரதான இலக்காகக் கொண்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் வரவு - செலவுத்திட்டத்தில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், அரச வருமானத்தை மேலும் அதிகரிக்கவும், அரச வருமான அதிகரிப்பையடுத்து நாணயத் தாள்களை அச்சிடுவதை தவிர்க்கவும் அல்லது நிறுத்தவும் வரவு - செலவுத்திட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2023ஆம் ஆண்டு இலக்குவைக்கப்பட்டுள்ள பொருளாதார வளர்ச்சி வேகத்துடன் இரண்டறக் கலந்ததாக இந்தத் திட்டம் இணைக்கப்பட்டுள்ளது.

இடைக்கால வரவு செலவுத் திட்டத்துக்கு அமைய 18 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொருவரும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்யுமாறும் முன்மொழியப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் வற்வரி செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் 12 வீதத்தில் இருந்து 15 வீதமாக அதிகரிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட 2022ஆம் நிதியாண்டுக்கான அரசாங்கத்தின் அமைச்சுகளுக்கான ஒதுக்கீடு 2 ஆயிரத்து 796.4 பில்லியன் ரூபா என்றிருந்தது. இடைக்கால வரவு - செலவுத்திட்டத்தில் அந்தத் தொகை 3 ஆயிரத்து 275.8 பில்லியன் ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கமைய 929.4 பில்லியன் ரூபாவால் அமைச்சுகளுக்கான ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## சீனாவின்...

விவரம், சீனத் தூதரகத்துக்கு இன்று அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இந்த உதவித் தொகை வழங்கும் நிகழ்வில் சீனத் தூதுவர் கலந்து கொள்ளவுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

இருப்பினும், சீனத் தூதுவர் இனப்படுகொலை தொடர்பில் தெரிவித்த கருத்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ள நிலையிலும், யாழ். பல்கலைக்கழகத்தினுள் சீனச் சார்பு நடவடிக்கைகளை அவர்கள் வெளிப்படையாக எதிர்த்துள்ள நிலையிலும், இந்த உதவித் தொகை வழங்கப்படுமா என்பது சந்தேகமாகியுள்ளது.

சீனத் தூதரகம் நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களுக்கு 2016ஆம் ஆண்டிலிருந்து வருடாந்தம் இந்த உதவித் தொகையை வழங்கி வருகின்றது. இந்த ஆண்டு வடக்கு மற்றும் கிழக்கு மாகாண பல்கலைக்கழக மாணவர்களுக்கே உதவித் தொகையை வழங்க சீனத் தூதரகம் தீர்மானித்துள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஏற்கனவே உதவித் தொகை வழங்கப்படுகின்றது.

இந்த நிலையில் யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 70 மாணவர்களுக்கு மாதாந்தம் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் ஒரு வருடத்துக்கு உதவித் தொகை வழங்குவதற்காகவே, மாணவர்கள் விவரம் சீனத் தூதரகத்தால் கோரப்பட்டுள்ளது. (அ-ஓ-5)

## கிளிநொச்சியில்...

பட்டுள்ளது. யாழ். பல்கலைக்கழகம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக இந்த நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டதாக சீனத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை இனப்படுகொலை விவகாரம் தொடர்பில் இலங்கைக்கான சீனத்தூதுவர் ருவிற்றரில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவித்ததை அடுத்து பல்கலைக் கழக மாணவர்கள் மத்தியில் ஏற்பட்ட சலசலப்பின் வெளிப்பாடாகவே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு பிற்போடப்பட்டதாக அறியவருகிறது.

மாணவர்கள் மத்தியில் சீனாவுக்கெதிரான எதிப்புணர்வு காரணமாக மாணவர் ஒன்றியம் நேற்று அறிக்கை ஒன்றையும் வெளியிட்டிருந்தது.

சீன விவசாயப் பல்கலைக்கழகத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடம் கூட்டு ஆய்வு நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவதற்கான நிகழ்வு நேற்று மு.ப. 10 மணியளவில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. அதுவே ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சீனப் பல்கலைக்கழக மாணவர்கள் இங்கும், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சீனாவிலும் ஆய்வு செய்வதற்குரிய வகையிலேயே கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திட இருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஓ-5)

## சீனத் தூதுவரின்...

தூதுவர் வெளியிட்ட கருத்தானது கண்டிக்கத் தக்கதுடன், தமிழர்களின் மனங்களைப் புண்படுத்தும் செயலுமாகும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டன அறிக்கை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்றையதினம் ஊடகச் சந்திப்பை நடத்தியதுடன், கண்டன அறிக்கையையும் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

இலங்கைக்கான சீனத்தூதுவர், இலங்கையில் தமிழ்ச் சமூகம் மீது சிறிலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகளுக்கு பொறுப்புக்கூறல் தொடர்பாக இலங்கைக்கு ஆதரவாகவும் பாதிக்கப்பட்ட தமிழ் சமூகத்தை கொச்சைப்படுத்தும் விதமாகவும் கருத்து வெளியிட்டமையை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

சிறிலங்கா அரசால் மேற்கொள்ளப்பட்ட இனவழிப்பு போரின்போது தமிழர்கள் அனுபவித்த துன்பங்களை சீனா நன்கு அறிந்திருக்கிறது. ஐ.நா. சபையின் அறிக்கையின் பிரகாரம், இன அழிப்பு போரின் இறுதி ஆறு மாத காலப்பகுதியில் மட்டும் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டதோடு நூற்றுக்கணக்கான தமிழ்ப் பெண்களும் சிறுமிகளும் சிறிலங்கா ஆயுத படைகளால் பலாத்காரம் செய்யப்பட்டனர்.

போர் நிறைவுடைந்த பின்னரும் வடக்கு - கிழக்கு தமிழர் பகுதிகளில் லட்சக்கணக்கான சிறிலங்கா படையினர் எமது தாயக பூமியை ஆக்கிரமித்து நிற்கின்றனர். போரின் பின்னர் எமது பாரம்பரிய தாயகத்தில் எம்மை சிறுபான்மை ஆக்குவதற்காக சிங்கள பௌத்த மக்களை குடியேற்றுவதற்கு எமது பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றதுக்கு பாரப்படுத்துவதன் மூலம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நீதியைப் பெறுவதே எமக்கு இருக்கும் ஒரே நம்பிக்கை. இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பரிந்துரைக்குமாறு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையை வலியுறுத்தும் கடிதத்தை தமிழர்கள் ஐக்கியமாக அனுப்பிய அதேநாளில், சீனத் தூதுவர் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு ஆதரவாக ருவிற்றரில் பதிவொன்றை இட்டுள்ளார். ஐ.நா. மனித உரிமை பேரவையில் இங்கிலாந்து, இந்தியா, அமெரிக்கா, ஜேர்மனி உட்பட பல நாடுகள் தமிழ் மக்களுக்கு ஆதரவாக ஒன்றிணைந்து செயற்பட்டு வரும் நிலையில் சீனாவின் குறித்த கருத்தானது இலங்கையில் தமது ஆதிக்கத்தை பலப்படுத்துவதற்கு அந்த நாடு இலங்கை அரசை துதிபாடுவதாக அமைகிறது. தமிழ் மக்கள் விரோத மனப்பான்மை கொண்டுள்ள சீனாவின் ஆதிக்கம் வடக்கு - கிழக்கில் அதிகரித்து வருவதை நாம் வன்மையாக கண்டிக்கிறோம் - என்றுள்ளது.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில், யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் அ.விஜயகுமார், செயலாளர் எஸ்.ராபின், கலைப்பீட மாணவர் ஒன்றிய தலைவர் எஸ்.ஜெல்சின், மாணவர் ஒன்றிய உறுப்பினர் இ.தர்ஷன் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-ம-125)

## அரச...

டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் கட்டாய ஓய்வு பெறவேண்டும் என்று அறிவித்துள்ளார் நிதி அமைச்சரும் ஜனாதிபதியுமான ரணில்.

நாடாளுமன்றத்தில் நேற்று, இடைக்கால வரவுசெலவுத் திட்டத்தை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகள் வெற்றிகரமாக நிறைவடைந்து வருகின்றன. அரச அலுவலர்கள் ஓய்வு பெறும் வயதெல்லை 60ஆக மட்டுப்படுத்தப்படும். 60 வயதைத் தாண்டிய நிலையில் பணிபுரிந்துவரும் அரச அலுவலர்கள் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் கட்டாயமாக ஓய்வு பெறவேண்டும். எதிர்காலத்தில் அரச சேவைக்காக இலத்திரனியல் வாகனங்களை மாத்திரம் பயன்படுத்துவதற்கான நடவடிக்கை படிப்படியாக முன்னெடுக்கப்படும். தனியார் துறையினரும் இதனைப் பின்பற்றுவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது - என்றார். (ம)

## ரூ.350...

அறிவித்துள்ளது.

இடைக்கால வரவு - செலவுத்திட்டத்தை நேற்று நாடாளுமன்றத்தில் முன்வைத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே நிதி அமைச்சரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க இதைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விவசாயத் துறையில் நிலுவையிலுள்ள கடன்களை தள்ளுபடி செய்ய 350 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அடுத்த பெரும்போகத்தின் போது உரத்தின் விலைகள் குறைக்கப்படுவதுடன், அவை தடையின்றிக் கிடைப்பதற்கும் வழிவகைகள் ஏற்படுத்தப்படும். மலைநாட்டு பகுதிகளிலிருந்து கொழும்பு உள்ளிட்ட நகர்ப்புறங்களுக்கு ரயிலின் ஊடாக மரக்கறிகளைக் கொண்டு செல்வதற்கான செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படும். மண்ணெண்ணெய் விலை உயர்வால் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்கள், பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு விரைவில் நிவாரணம் வழங்கப்படும் - என்றார். (அ-ம)

## 50 நிறுவனங்கள்...

டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சாரசபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம், சிறிலங்கன் எயார் லைன்ஸ்தவிர 50 அரசநிறுவனங்களை மறுசீரமைப்பது தொடர்பில் ஆராயப்பட்டுவருகிறது. நஷ்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக அரச நிறுவன மறுசீரமைப்புப் பிரிவை அமைக்க 200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம், தனது கடன் வழங்கல் நிபந்தனைகளில் ஒன்றாக வலியுறுத்தி வரும் நிலையில், 50 அரச நிறுவனங்களை மறுகட்டமைப்பது தொடர்பில் வரவு - செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## நலிந்தோருக்காக...

ரம் ரூபா நிவாரணக் கொடுப்பனவை வழங்க இடைக்கால வரவு - செலவுத்திட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இடைக்கால வரவு - செலவுத்திட்டத்தில் பொருண்மியத்தில் நலிந்தவர்களுக்கான சிறப்பு நிவாரணம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாகவே வறிய நிலையில் உள்ளோருக்கு அடுத்த நான்கு மாதங்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், சமுர்த்தி பெறுபவர்கள், முதியோர் கொடுப்பனவைப் பெறுபவர்கள் மற்றும் நாட்பட்ட நோய்களுக்கான கொடுப்பனவை பெறுபவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்தக் கொடுப்பனவை அதிகரிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நாட்டில் சுமார் 61 ஆயிரம் குடும்பங்கள் உணவுப் பாதுகாப்பின்றி உள்ளன. அவற்றுக்கு சர்வதேச நிதியுதவியுடன் நிவாரணங்கள் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கர்ப்பிணிகளுக்கு தற்போது வழங்கப்படும் கொடுப்பனவுக்கு மேலதிகமாக மேலும் 2 ஆயிரத்து 500 ரூபாவை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன், கொவிட் தொற்றினால் தொழிலை இழந்தவர்களுக்கு புதிய தொழில் வாய்ப்புக்களுக்கான பயிற்சியை வழங்க 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## கோதுமைக்கு...

குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சில இடங்களில் 400 ரூபா வரையில் கோதுமை மா விற்கப்படுகின்றது என்றும் முறைப்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன. அதேநேரம், யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள சில கடைகள் மற்றும் அங்காடிகளில் ஒருவருக்கு இரண்டு கிலோகிராம் என்ற அளவில் மட்டுப்படுத்தப்பட்ட விநியோகமும் நேற்று இடம்பெற்றது. (அ-ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையிலும்...

இலங்கையில் கல்வித்துறை தனியார் மயப்படுத்தப்படுகின்றதா என்ற அச்சத்தை ஏற்படுத்தியிருக்கின்றது ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவின் இடைக்கால வரவு - செலவுத் திட்டம் தொடர்பான நேற்றைய உரை.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் கிளையொன்றை குருநாகலில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள அதேநேரம், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் இலங்கையில் அவற்றின் கிளைகளை திறப்பதை ஊக்குவிக்கும் வகையில் சட்ட ஒழுங்குமுறைகளை திருத்தியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். இந்த நிலையிலேயே, அவருடைய இந்த உரை, இலங்கையில் கல்வி தனியார் மயப்படுத்தப்படுகின்றதா? என்ற ஐயப்பாட்டை ஏற்படுத்தியுள்ளது. முன்னதாக, சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை இலங்கை பெறும்போது, இலவசக் கல்வியும் இலவச மருத்துவமும் சவாலுக்கு உட்படலாம் என்று அமைச்சர்கள் சிலர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ-ம)


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில்**
**06 பரப்பு (நிலபரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.**

- இரண்டு பரப்பாக பிரிக்கப் பட்ட நிலையில்.
- கைதடி சந்தியிலிருந்து 750 M தூத்தில்
- A09 வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்.
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி.

**076 7558 606, 077 259 0391**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 42 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.**

- நான்கு பரப்பாகவும், இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி (காப்பெற் வீதி) முகப்புடன்.
- 784 இலக்க பாதை போக்கு வரத்து பேரூந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- பொன்னாலை ரவுண்டப் போட் சந்தியிலிருந்து 1 KM தூரத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி (Jaffna College) இருந்து 1 KM தூரத்தில்.
- ஒரு பரப்பின் (நிலபர்ப்பு) விலை இரண்டு இலட்சம் 200,000/= மட்டும்.

தொடர்பு: **077 911 6983**
**077 148 8348**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 150 பரப்புக் காணி (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.**

- இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலை யில்.
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 1/2 KM தூரத்தில்
- சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1 1/2 KM தூரம்
- புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காப்பெற் வீதியில் இருந்து இரண்டாவது காணி .
- 775 இலக்க வழி பேரூந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்.
  விவசாயம் செய்வதற்கும், வீடுகள் அமைப்பதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் (1 நிலபரப்பு) விலை இரண்டு இலட்சம் (200,000) மட்டும்.

**077 6585 999**
தொடர்பு: **076 4385 814**
**077 8748 135**

## வேலைவாய்ப்பு

- முன்பள்ளி ஆங்கில, தமிழ், கணித ஆசிரியர் (முன்பள்ளி Diploma முடித்தவர்கள் / பழக விரும்புபவர்கள்)
- முன்பள்ளி உதவியாளர்
- சிங்கள எழுத்து கற்பிக்க கூடிய ஆசிரியர்கள்
- தரம் 1 - தரம் 5 வரை ஆங்கில பாடம் கற்பிக்க கூடியவர்கள்
- முன்பள்ளி டிப்ளோமா கற்கை நெறியுடன் பழக விரும்புபவர்கள்
- மல்லாகம், தெல்லிப்பளை, பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை, சண்டிலிப்பாய், இணுவில், யாழ்ப்பாணம், புத்தூர் ஆகிய இடங்களுக்கு ஆட்கள் தேவைப்படுகின்றனர்.
- நேர்முகத் தேர்வுக்கு சமூகமளிக்கும் போது உரிய ஆவணங்களுடன் வருகை தருதல் வேண்டும்.

**நேர்முகத்தேர்வு நடைபெறும் திகதி:**
**01.09.2022ம் திகதி வியாழக்கிழமை**
**காலை 7.30 மணி - பி.ப 3.00 மணிவரை**
**இடம்: Little Masters' Montesoori**
**சிவபதி, கே.கே.எஸ். வீதி, இணுவில்.**
**T.P: 077 377 0524**

(CS 20564) (3/6)

## பணிப்பெண் தேவை

யாழ்.கந்தர்மடத்தில் இருபெண்கள் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு தங்கிநின்று வயோதிப பெண் ஒருவரை பராமரிப்பதற்கும் வீட்டு வேலைகள் செய்வதற்கும் பணிப்பெண் ஒருவர் தேவை.

**077 518 2148, 077 436 9277**

## Double Cap For Sale

நல்ல நிலையில் உள்ள
250-XXXX Double Cap
விற்பனைக்கு உண்டு.

**077 3039 754**

## SMART SCIENCE CENTER

**2022 A/L DAY CLASS**

• பௌதீகவியல் • இணைந்த கணிதம்

T.K. KAJAN B.Sc (077 653 1177)
T.S. RANKAN (077 622 2298)

## A/L இணைந்த கணிதம்

A/L 2022, பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான வினாவிடை வகுப்புக்கள் (அலகு ரீதியான மீட்டல், கடந்த கால, பரீட்சை மாதிரி வினாவிடைகள்) மற்றும் A/L 2023 A/L 2024 மாணவர்களுக்கும் தனியாகவோ Or குழுவாகவோ கற்பிக்கப்படும்.

(CS 46244) (3/6) **077 832 4002**

## வீடு வாடகைக்குதேவை

சிறிய குடும்பத்திற்கு யாழ்நகர், நல்லூர் பகுதியில் வீடு வாடகைக்கு தேவை.

(cs 20397) (2/6) **077 0876729**


## மரண அறிவித்தல்



### நல்லையா பத்மநாதன்
### [பிறைசூடி]

(ஓய்வுபெற்ற அதிபர்- வேலணை கிழக்கு ம.வி)

**தோற்றம்**
**05.07.1946**

**மறைவு**
**29.08.2022**

நாரந்தனையை பிறப்பிடமாகவும், கலட்டி அம்மன் கோவிலடி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா பத்மநாதன் (பிறைசூடி) அவர்கள் நேற்று முன்தினம் (29.08.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் மகேஸ்வரி, நடேஸ்வரி, காலஞ்சென்றவர்களான வசந்தானந்தன், தங்கவேல் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான நடராசா, கனகசுந்தரி ஆகியோரின் மருமகனும் குமரவல்லியின் அன்புக் கணவரும் பத்மரூபன், பத்மஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வகுமார், கஜீனா ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிஷயனின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவரான குமரேசன், குமாரவேல் (அவுஸ்திரேலியா), குமாரதாஸ் (நெதர்லாந்து) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் 56/3 கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1.00 மணியளவில் யாழ்.கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பத்மரூபன் (மகன்) - 077 361 4630/ 021 222 1792**
**பத்மஜா (மகள்) - 077 393 5318**

தகவல்
**குடும்பத்தினர்**

(CS 20558) (3/6)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்றுறை செல்லும் பிரதான வீதியில் பிரசித்திபெற்ற மண்கும்பான் வீரகத்தி பிள்ளையார் கோயில் அருகாமையில் 26 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

- சாட்டி கடற்கரைக்கு செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ளது.
- யாழ். நகரிலிருந்து 8 KM தூரத்தில் உள்ளது.
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்.
- வீடுகள் அமைப்பதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம் :
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை
**தரகர் தேவையில்லை.**

**தொடர்பு:- ஜெயம்**

**077 8147 389**
**077 2417.589**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.